1993 மார்ச் 17]

முற்பகல் 10-30

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மிகவும் இன்றியமையாத ஒன்று. அந்தப் பகுதியிலே இதை ஒரு பெரிய பிரச்சினையாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால், இதனுடைய செலவுத் தொகை ஒரு இலட்சம் அளவிலேதான் உள்ளது. ஆனால் நிலம் ஆக்கிரமிப்பு பிரச்சினையினால்தான் அது நின்று போய் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், நிலத்தை ஆக்கிரமிப்பு செய்தவர்களை இரும்புக் கரம் கொண்டு அடக்கி, உடனடியாக இதைச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்திலேயாவது செய்து தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் மூலமாக இந்த வேலைகளைச் செய்வதற்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 113. (குறுக்கீடு) நீங்கள் கேட்கிறீர்களா திரு. இராமசுப்பு இருக்கையில் இல்லை. திரு. வி. கே. சின்னசாமி கேட்கிறார் ; திரு. தமிழரசனும் கேட்கிறார். திரு. தமிழரசன், திரு. வி. கே. சின்னசாமி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

113—

கூட்டுறவு விவசாய நிலவள வங்கி மூலம் விவசாயிகளுக்கு கூடுதலாக டிராக்டர்கள் வழங்கல்.

*10956— திரு. எஸ். எஸ். இராமசுப்பு :
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு விவசாய நிலவள வங்கியின் மூலமாக விவசாயிகளுக்கு கடனாக தற்போதுள்ள எண்ணிக்கையிலிருந்து கூடுதல் டிராக்டர்கள் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நிலவள வங்கிகள் மூலமாக கூடுதலாக டிராக்டர் வாங்க கடன் வழங்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது விவசாயிகள் அதிகமான அளவில் கூலி ஆட்கள் கிடைக்காததால்— விவசாயக்—கூலிகள் கிடைக்காததால் பல்வேறு வழிகளில் டிராக்டர்கள் போன்ற கருவிகளைப் பயன் படுத்துகிற சூழ்நிலை இருக்கிறது. எனவே, இந்த டிராக்டர்கள் அதிகமாக வழங்கும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதோடு இந்த அறுவடை செய்கின்ற கருவிகளும் தற்சமயத்திலே கிடைப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்பது, விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய டிராக்டர்கள், அறுவடைக் கருவிகள், வேறு எந்தக் கருவிகள் கேட்கிறார்களோ, அதற்கு அனைத்துக்கும் கடன் கொடுக்கின்ற நிலைமையை மாண்புமிகு அமைச்சரவர்கள் உருவாக்க உத்தரவு வழங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சி வந்த பின்னால், இதற்கு முன்னாலே கொடுத்துக் கொண்டிருந்த கடன்களைவிட சுமார் 50 சதவீதம் அதிகமாக உயர்த்தி 1991–92 லேயே கொடுத்திருக்கிறோம். அதற்கு முன்னாலே 1990–91-இல் 630 டிராக்டர்கள் கொடுத்ததை மாற்றி, அதை விட அதிகமாக்கி 1991–92-இல் 939 டிராக்டர்களைக் கொடுத்து இருக்கின்றோம். இது போலவே மற்ற எல்லாத் திட்டங்களிலும் நிலவள வங்கிகள் மூலமாக விவசாயிகளுக்கு என்னென்ன உதவி தேவையோ அப்படிப்பட்ட உதவிகள் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நிலவள வங்கி மூலமாக ஏற்கனவே தரப்பட்டிருக்கிற டிராக்டர்கள் எவ்வளவு? இந்த ஆண்டு எவ்வளவு தரப்படும்? தரப்படுகிற டிராக்டர்களிலே நிலமற்ற ஏழை, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1993 மார்ச் 17]

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, டிராக்டர்கள் வழங்குவதிலே மத்திய அரசு நபார்டு வங்கி சில கன்டிசன்களை விதித்திருக்கிறார்கள். அதிலே குறைந்தபட்சம் எட்டு ஏக்கர் நிலமாவது இருந்தால்தான் அந்த நிலத்தை அடமானம் வைத்தவர்களுக்கு டிராக்டர் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆகவே, நிலம் இல்லாத விவசாயிகளுக்கு டிராக்டர் கொடுப்பது என்பது இப்பொழுது இயலாத காரியம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதைப்போல, 1991–92-இலே அதற்கு முன்னாலே இருந்தது, 1990-91-இலே 8 கோடியே 73 இலட்சம் கடன் வழங்கப்பட்டது; 630 டிராக்டர்கள். 1991–92-இல் இந்த ஆட்சி மலர்ந்த பிறகு 939 டிராக்டர்களை வழங்கி இருக்கின்றோம்; 14 கோடி ரூபாய்க்கு வழங்கியிருக்கின்றோம். இந்த ஆண்டு இன்னும் முடிவடையவில்லை. ஆனால் பிப்ரவரி மாதம் முடிய இதுவரை 839 டிராக்டர்களை 12 கோடியே 71 இலட்சம் ரூபாய்க்கு வழங்கியிருக்கின்றோம். இந்த மாதமும் வழங்கப்பட்டு வருகின்றது. இன்னும் அடுத்த எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைய டிராக்டர்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். மொத்தமாக ஐந்தாண்டுத் திட்டத்தில் 62 கோடி ரூபாய்க்கு டிராக்டர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிராக்டர்கள் வழங்குகிறபோது இன்று கடுமையான விதி முறைகள் இருப்பதால் விவசாயிகள் பெற முடியாத சூழ்நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட விதி முறைகளை தளர்த்துவதோடு இன்றைய தினம் எட்டு ஏக்கர் என்பதற்குப் பதிலாக ஐந்து ஏக்கர் என்று அரசு நிர்ணயிக்குமா என்று அறிய விரும்புவதோடு, படித்த பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற வகையில், அவர்களுக்குக் கிராமப் புறத்திலே விவசாயிகள் குடும்பங்களிலே இருக்கக்கூடிய பட்டதாரிகளுக்கு கடனாக டிராக்டர் வழங்கத் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இந்தக் கடன்களுக்கு நிதியை, மறு நிதியாக 'நபார்டு' வங்கியிலேயிருந்து பெறுகிறோம். அவர்கள் போட்டிருக்கிற சட்ட விதிகளுக்குட்பட்டுத்தான்

கடன்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூறியது ஒரு நல்ல யோசனை; 8 ஏக்கர் என்பதைக் குறைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். இதை நாமாக முடிவு செய்ய முடியாது. ஆனால், நாமும் அந்த வங்கியோடு பேசி, அதைக் குறைப்பதற்கு முடியுமா என்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிலமே இல்லாதவர்களுக்கு டிராக்டர்கள் கொடுப்பதற்கு அவர்கள் ஒப்புக் கொள்வார்களா என்று தோன்றவில்லை ; ஆனாலும் நாம் பேசிப் பார்க்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சா. மா இராமச்சந்திரன்.

திரு. மா. சா. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 8 ஏக்கர் நிலத்திற்குக் குறையாமல் இருந்தால்தான் டிராக்டர் பெறுவதற்கு தகுதி வருகிறது என்று கூறினார்கள். ''நம்முடைய நாட்டுக்குப் பொருத்தம் — நாமே நடத்தும் கூட்டுப் பண்ணை விவசாயம்'' என்று பட்டுக்கோட்டையார் அவர்கள் பாடலுக்கேற்ப 2, 3 ஏக்கர் நிலங்களைப் பெற்றிருக்கிற சிறு குறு விவசாயிகள் கூட்டாய்ச் சேர்ந்து டிராக்டர் பெறுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுப்பண்ணைகள் இப்போது தமிழகத்திலே இல்லை. சோவியத் நாட்டிலேதான் இப்படிப்பட்ட கூட்டுப்பண்ணைகள் இருந்தன. அங்கேகூட இப்போது அது இருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட கூட்டுப்பண்ணைகள் அமைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்வருவார்களேயானால், அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. எஸ். துரைமுருகன்.

திரு. கே. எஸ். துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நிலவள வங்கியின் மூலம் டிராக்டர்கள் வாங்கக் கடன் கொடுக்கிறபோது, பட்டதாரிகளிலே, குறிப்பாக வேளாண்மைப் பொறியியல் பட்டதாரிகளுக்கும், வேளாண்மைப் பொறியியல் துறையில் பட்டயம் பெற்றவர்களுக்கும்—இன்றைக்கு பல பேர் அரசு வேலை வாய்ப்புக் கிடைக்காத சூழ்நிலையில் இருக்கிறார்கள். இப்போது, நம்முடைய நாட்டிலே நாம் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்

1993 மார்ச் 17]

என்பதற்காக 'ஃபார்ம் மெகனைசேஷனை' யும், உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகப்படுத்துவதற்கு நாம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையிலே அரசு வேலைவாய்ப்பு கிடைக்காத வேளாண்மைப் பொறியியல் பட்டதாரிகளுக்கோ, அல்லது வேளாண்மைப் பொறியியல் பட்டயம் பெற்றவர்களுக்கோ குறைந்த வட்டியில் முன்னுரிமைக்கொடுத்து, டிராக்டர்கள் வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை டிராக்டர்கள் கொடுப்பது, வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேலை வாய்ப்பை பெருக்குவதற்கான யோசனை சொல்லியிருக்கிறார்கள். அதுவும் வேளாண்மைத் துறையிலே பட்டப்படிப்புப் படித்தவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பணம் திரும்ப வருகிற வகையிலே இருக்குமானால், அதனை அரசு பரிசீலிக்கும். ஏற்கெனவே டிராக்டர்கள் வாங்கியவர்களில் இதுவரை பணத்தைக் கட்டாமல், 1,627 டிராக்டர்கள் வழங்கப்பட்டு, பணம் திரும்ப வரவில்லை. தகுந்த ஜாமீன் இருந்து, அதை அவர்கள் கொடுப்பார்களேயானால், அது பற்றி நிச்சயமாக அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு டிராக்டரினுடைய விலை குறைந்தபட்சம் 2 லட்சம் ரூபாய் வரைக்கும் ஆகிறது. ஆனால் ஒரு 8 ஏக்கர் விவசாயினுடைய நிலமே, 2 லட்சத்திற்கும் பெறாத பகுதிகளிலே இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அந்த டிராக்டர்களை அவர்கள் வாடகைக்கு விட்டுத்தான் அந்தக் கடனை அடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்த டிராக்டர்களை வாடகைக்கு விடுவதற்கும், அதற்கு 'எஃப்.சி.' போன்றவற்றைத் திரும்பக் கொடுக்கச் செய்ய வேண்டிய அவசியம் இல்லாத நிலையையும் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் வாடகைக்கு விடுவதிலே நாம் எந்தவித இடையூறும் செய்வதில்லை. ஆனால், 'எஃப்.சி.' இல்லாமலே செய்ய வேண்டும் என்பது, அது முடியுமா என்பது

தெரியவில்லை. போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தான் இதற்கு பதில் சொல்ல வேண்டும். காரணம், அது சரியாக வேலை செய்கிறதா, இல்லையா, பிரேக் போடுகிறதா, இல்லையா என்பதையெல்லாம் அவ்வப்போது பார்த்து, பழுது பார்ப்பதற்கு அது உதவியாக இருக்கும் என்ற காரணத்தினால், அதைத் தளர்த்த முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆசைமணி.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று உணவு உற்பத்தியிலே முன்னேறியிருக்கின்ற காயிதே மில்லத் மாவட்டம், தஞ்சை மாவட்டங்களுக்கு அங்குள்ள நிலவள வங்கிகளுக்கு, மற்ற மாவட்டங்களைவிட, அதிக எண்ணிக்கையில் டிராக்டர்கள் ஒதுக்கீடு செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் உற்பத்தியில் முதலிடத்தை வகிக்கின்ற மாவட்டம் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம். நிச்சயமாக அந்த விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் டிராக்டர்களைக் கடனாகப் பெற்று கடனைத் திருப்பிச் செலுத்த முடியாததால் டிராக்டர்களை ஜப்தி செய்து விட்டார்கள். இப்போது அவர்கள் பாதித் தொகையைக் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். இப்படிப் பாதித் தொகையை விவசாயப் பெருங்குடி மக்கள் கட்டினால் அந்த டிராக்டர்களை திருப்பித்தர அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிராக்டர் வாங்கி கடன் திருப்பிக் கட்டாதவர்கள் பலர் இருக்கின்றார்கள் என்று நான் ஏற்கனவே தெரிவித்தேன். விவசாயிகளுக்குச் சில நோத்தில் பிரச்சினை ஏற்படுவது உண்டு. தொடர்ந்து ஒராண்டுக் காலம், இரண்டாண்டு

காலம் மழைபொய்த்துப் போகுமானால் கட்டமுடியாத சூழ்நிலைமை வரும். அப்படிப்பட்ட நேரத்தில் அரசு கடுமையாக நடவடிக்கை எடுப்பதில்லை. ஆனால் தொடர்ந்து எட்டுஆண்டுகள் பத்து ஆண்டுகளுக்கு மேலே கூட கட்டாமல் இருக்கும் நேரத்திலேதான் வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல இதுவரை கட்டாமல் இருந்தவர்கள் பாதித் தொகையைக் கட்டுவார்களானால் அவர்களுக்கு டிராக்டர்களைத் திருப்பிக் கொடுத்து, கொஞ்சம் அவகாசமும் கொடுக்கப்படும். மிச்சம் இருப்பதைக் கட்டுவதற்கு உறுப்பினர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படியிருந்தால் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராம. இராமநாதன்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆசைமணி அவர்கள் பேசும்போது இன்றைக்கு நெல் விளைச்சலிலே நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், தஞ்சை மாவட்டம் ஆகியவை முன்னோடியாக திகழ்ந்து வருகின்றன. எனவே, டிராக்டர்களை வழங்குவதில் எங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்று கேட்டபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று சொன்னார்கள். தஞ்சைமாவட்டத்திலிருந்து நாகப்பட்டினம் தற்போது பிரிக்கப்பட்ட பிறகு தஞ்சை மாவட்டத்திற்கும் மனமுவந்து முன்னுரிமை அளிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடிவு எடுத்து உறுதி அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு அடுத்தாற்போல் நெல் உற்பத்தியில் இரண்டாவது இடத்தைப் பிடிக்கின்ற மாவட்டம் தஞ்சை மாவட்டம். ஆகவே, அடுத்த முன்னுரிமை தஞ்சை மாவட்டத்திற்கு நிச்சயமாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சூ. சே. இராஜமன்னார்.

திரு. சூ. சே. இராஜமன்னார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில வள வங்கிகளில் டிராக்டர்களுக்கு கடன் கேட்கும்போது 8 ஏக்கர் நிலம் இருந்தால் போதும் என்று சொல்லிவிட்டு, டிராக்டர்களை வழங்கும்போது Double Security கேட்கும் வழக்கம் இருக்கிறது. 8 ஏக்கர்

நிலம் வைத்திருக்கும் விவசாயி இரண்டு மடங்கு செக்யூரிட்டி கொடுப்பதெல்லாம் நடைமுறையில் சாத்தியமில்லை. ஆகவே டிராக்டர்களை வழங்கும்போது அந்த டிராக்டர்களையே hypothecate செய்துகொண்டு, செக்யூரிட்டி தேவையில்லை என்ற விதி முறையை முன் வைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் நமக்கு டிராக்டரையும் ஈடுவைத்து, நிலத்தையும் அடமானம் காட்டி அதற்குப் பிறகு டிராக்டர்களை விற்று விடுகிறார்கள். கடனைக் கட்டுவது இல்லை. டிராக்டரை மட்டுமே வைத்துக் கொண்டால் அந்தப் பணமே திரும்ப வராமல் போய்விடும். ஆகவே, இப்படிப் பட்ட யோசனையை மாண்புமிகு உறுப்பினர் சொல்லவேண்டாம் என்று கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. எம். தங்கவேல்.

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக எங்களுடைய திருச்சி மாவட்டம் விவசாயத்தில் முன்னணியில் இருக்கிற காரணத்தாலே டிராக்டர்களை வழங்கும் முன்னுரிமை எங்கள் மாவட்டத்திற்கு வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பின்னர் இது மாதிரிதான் கேள்வி தொடரும்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் மூன்றாவது இடத்தில் இருப்பது உண்மைதான். ஆனால் நெல் உற்பத்தியில் போதுமான அளவு அந்த மாவட்டத்தில் கொள்முதல் ஆவது இல்லை. இதை அந்த மாவட்டத்திலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இரண்டு ஆண்டு கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படியிருந்தும் விளைச்சலில் இன்னும் கால் பங்குகூட எட்டாமல் இருக்கிறது. நெல் கொள்முதல் உற்பத்திக்கு உதவி செய்வீர்களானால் நிச்சயமாக உங்கள் மாவட்டத்திற்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் மூலம் விவசாயப் பட்டயம் பெற்றவர்களும், பொறியியல் பட்டயம் பெற்ற

வர்களும், அந்த டிராக்டர்களைக் கடனாகப் பெற்று, தங்களுடைய வேலையின்மையைப் போக்கிக் கொள்ள அந்த டிராக்டர்களை வைத்துக் கொண்டு பிழைத்துக் கொண்டிருந்தார்கள். அதே போன்று தமிழகத்தில் எத்தனை பட்டயம் பெற்றவர்களுக்கு அந்த டிராக்டர்கள் வழங்கப்பட்டது? அவர்கள் எவ்வளவு பேர் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பரமசிவம். தனிக் கேள்வி போடவும். கேள்வி, இருக்கின்ற எண்ணிக்கையைக் கூட்டிக் கொடுப்பது பற்றியது. ஒரு குறிப்பிட்ட செக்ஷனுக்குக் கொடுத்திருக்கிறார்களா என்பது இதில் கிடைக்காது.

வினா எண் 114 திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர். —உறுப்பினர் இருக்கையில் இல்லை.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 115, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

115—

பார்த்திபனூர் பகுதிகளில் வரப்பு திரட்டுவதற்காக ஒதுக்கிய தொகை.

*14877—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி டிவிசன் பார்த்தி னூர் டிவிசன்-1 மற்றும் பார்த்திபனூர் டிவிசன்-2 வரப்பு திரட்டுவதற்கு ஒதுக்கிய தொகை (1992-93) எவ்வளவு ? (விவசாயப் பொறியியல் துறை)

(ஆ) இத் திட்டம் எந்தெந்த கிராமத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டது ?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே